<u>செய்தி வெளியீடு எண்.677</u> <u>நாள்.04.10.2009</u>

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

**அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை.**
**தினமலர் செய்திக்கு அரசு விளக்கம்**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவைப்படும் மருந்துகளை தரமான மருந்து நிறுவனமிடமிருந்து திறந்த வெளி ஒப்பந்தம் மூலம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு தங்கு தடை இன்றி விநியோகம் செய்யப்படுகிறது. 2009–10–ஆம் ஆண்டிற்கு அரசு மருத்துமனைகளுக்கு மருந்துகளுக்காக மட்டும் அரசு 224 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி உள்ளது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 2009–10 ஆண்டுக்கு 263 வகையான மருந்துகள் வாங்க முடிவு செய்து, 253 மருந்துகளை கொள்முதல் செய்வதற்கு ஏற்கனவே அந்தந்த மருந்து நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டது. மீதமுள்ள 10 வகையான மருந்துகளில் 5 வகையான மருந்துகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் இறுதி செய்யப்பட உள்ளது. எஞ்சிய 5 வகையான மருந்துகளுக்கு எந்தவித நிறுவனமும் ஒப்பந்தப் புள்ளிகளில் கலந்து கொள்ளாததால் அந்த மருந்துகள் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் பெற இயலவில்லை.

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சோடியம் வால்பிரைட் 200 மி.லி., எனலாப்பிரில் மற்றும் எக்கோஸ்பிரின் ஆகிய மூன்று மருந்துகளில் சோடியம் வால்பிரைட் 200 மி.லி. என்ற மருந்துக்கு கொள்முதல் வழங்கப்பட்ட மருத்துவ நிறுவனம் தங்களால் அந்த மருந்தினை தயாரிக்க முடியாது என 27.06.2009 அன்று தெரிவித்துவிட்டது. இந்த ஒப்பந்தப் புள்ளிகளில் பங்கு பெற்ற மற்ற நிறுவனங்களும் இம்மருந்தினை தங்களால் தயாரிக்க இயலாது என தெரிவித்துவிட்டதால் மீண்டும் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட உள்ளது. எனலாப்பிரில் என்ற மருந்தினை வழங்க தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்து நிறுவனம் மருந்துகள் தரக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டதால், இரண்டாம் இடத்தில் உள்ள ஒப்பந்ததாரரிடம் மருந்துகள் வழங்க 05.09.2009 மற்றும் 26.09.2009 ஆகிய தேதிகளில் ஆணைகள் வழங்கப்பட்டு உடனடியாக மருந்துகள் வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த இரண்டு மருந்துகளையும் பொதுச்சந்தையில் வாங்கிக் கொள்ள தடை இல்லா சான்றிதழ் எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளை மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர்கள் உள்ளூர் சந்தையில் வாங்கி எல்லா மருத்துவமனைகளிலும் நோயாளிகளுக்கு தங்கு தடையின்றி வழங்கி வருகின்றனர். எக்கோஸ்பிரின் என்ற மருந்து தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் அத்தியாவசிய மருந்துப் பட்டியலில் இடம் பெறவில்லை. எனவே, அந்தந்த அரசு மருத்துவமனைகள் அதை தாங்களே வாங்கி நோயாளிகளுக்கு தங்கு தடையின்றி வழங்கி வருகின்றனர். ஆனால் ஆஸ்பிரின் என்ற மருந்து போதிய அளவில் கையிருப்பு உள்ளது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மருத்துவ நிறுவனங்களின் தேவைப் பட்டியலுக்கேற்ப உடனடியாக மருந்துகளை வழங்கி வருகிறது. ஒவ்வொரு மாதமும் மருந்துக் கிடங்கு பொறுப்பாளர், மருத்துவக் கல்லூரி முதல்வர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அவர்களுடன் ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தி அவர்கள் கொடுக்கும் தேவைப்பட்டியலுக்கேற்ப உடனடியாக மருந்துகள் வழங்கப்படுகின்றன. செய்தியில் குறிப்பிட்டுள்ளது போல் இரண்டு மாதத்திற்கான மருந்தினை மட்டுமே தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் வழங்குவதில்லை. எந்தக் கால அளவையும் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் நிர்ணயிக்கவில்லை.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மூன்று மாதத்திற்கான மருந்துகளின் தேவையை கையிருப்பு வைத்துள்ளது. மேலும் இரண்டு மாதத்திற்கு தேவையான மருந்துகளை கொள்முதல் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு, அம்மருந்துகள் மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் தயார் செய்யப்படுகிறது. தவிர்க்க முடியாத காரணங்களினால் மருந்து நிறுவனங்கள் **60** நாட்களுக்குள் மருந்துகள் வழங்காமல் இருந்தாலோ அல்லது மருந்துகள் தரக்குறைவு என அறிவிக்கப்பட்டாலோ அதுபோன்ற நேரங்களில் மட்டுமே கால தாமதம் ஏற்படும் போது மருந்துகளை உள்ளூர் சந்தையிலேயே வாங்கிக் கொள்ளவும் எல்லா மருத்துவமனைகளுக்கும் தடையின்மைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய மருந்துப் பட்டியலிலுள்ள எல்லா மருந்துகளும் சீரான முறையில் அரசு மருத்துவமனைகளில் விநியோகம் செய்யப்படுகிறது. மருந்துக் கிடங்குகளில் தேவையான அளவு மருந்துகள் கையிருப்பு உள்ளது. மேலும் மருந்துகளின் விநியோகத்தை கணினிகள் மூலம் தினமும் கண்காணித்து வருகிறது. எனவே செய்தியில் தெரிவித்துள்ளது போல் அரசு மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகளுக்கு எந்தத் தட்டுப்பாடும் இல்லை.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு)

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.